



ஈரோடு மாவட்டம் பவானி ஊராட்சி ஒன்றியம், தொட்டிபாளையம் ஊராட்சி ஜீவா நகர் பகுதியில் புதிய முழுநேர நியாய விலைக் கடையினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து அத்தியாவசியப் பொருள்களை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், ஒன்றிய செயலாளர் பவானி கே.ஏ.சேகர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் நடைபெற்ற விழாவில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய சுயமரியாதை இயக்க வரலாறு – இரண்டு பாகங்கள் நூலை திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பெற்றுக் கொண்டார். விழாவிற்கு தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் தலைமை வகிக்க பேரவைத் தலைவர் கி.நடராசன் வரவேற்றுப் பேசினார். நூல் ஆசிரியர் க.திருநாவுக்கரசு அவர்கள் அறிமுக உரை நிகழ்த்தினார். இவ்விழாவில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. , திராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர். திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்ஸ் என்.ஆர்.எஸ்.பெரியார் இணைப்புரையாற்றினார். நக்கீரன் பதிப்பகம் தி.சிற்றரசு நன்றி கூறினார்.

### தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு ரூ.2000 கோடி கல்வி நிதி வழங்க மறுப்பு!

# முதலமைச்சரின் சிறப்புத் திட்டத்திற்கு ரூ.10 ஆயிரம் வழங்கிய சிறுமி!

## கடலூரில் பொதுமக்கள் – ஆசிரியர்கள் – மாணவர்கள் சிறுமியைப் பாராட்டினர்!

**கடலூர், பிப். 25-**

**தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு ரூ.2152 கோடி கல்வி நிதி வழங்க மறுப்பு தெரிவிக்கும் நிலையில், முதலமைச்சரின் சிறப்பு திட்டத்திற்கு ரூ.10 ஆயிரத்தை கடலூரைச் சேர்ந்த எல்.கே.ஜி. படிக்கும் மாணவி நன்முகை வழங்கினார். இச்சிறுமியின் செயலை கடலூர் மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் வெகுவாக பாராட்டினர்.**

எல்.கே.ஜி. வகுப்பு படிக்கின்ற கடலூர் மாவட்டத்தை சார்ந்த நன்முகை என்ற சிறுமி ஒன்றிய அரசு தர மறுத்த 2000 கோடி ரூபாய்க்கு, தன் பங்களிப்பாக தனது சேமிப்பிலிருந்து ரூபாய் 10000ஐ தமிழ்நாடு முதல்வர் அவர்களின் சிறப்புத் திட்டத்திற்காக நிதி அளித்துள்ளார்என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



இக்குழந்தையின் பெற்றோர்,மருத்துவர்கள் டாக்டர் பால.கலைகோவன், டாக்டர் கிருஷ்ணப்பிரியா ஆவர். இச்சிறுமியின் தாத்தா பாலசுப்பிரமணியன் (தமிழ் ஆசிரியர், தலைமை ஆசிரியர் ஓய்வு, உளுந்தூர்பேட்டை அரசு உயர்நிலைப்பள்ளி), பாட்டி சாந்தி, (தமிழ் ஆசிரியை) உதவி தலைமை ஆசிரியர், (கோட்டக்குப்பம்), இவருடைய பெரியம்மா Dr. கல்பனா, ph D Gold medalist (தமிழ்) அரசு கலைக்கல்லூரி , விருத்தாச்சலம்,

இச்சிறுமிக்கு 4 வயது ஆகிறது. கடலூர் அரிஸ்டோ ப்பளிக் பள்ளி LKG படித்து வருகிறார்.

இச்சிறுமியின் இச்செயலை அப்பகுதியில் சேர்ந்த பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் பாராட்டினர். அச்சிறுமி தன் மழலை மொழியில் பேசுகையில் ஒன்றிய அரசு படிப்புக்காக பணம் கொடுக்கவில்லை. அதனால் கல்விக்காக முதல்வர் அவர்களின் சிறப்பு திட்டத்திற்காக எனது சேமிப்பு பணத்தை மகிழ்ச்சியுடன் வழங்கினேன் என சிறுமி நன்முகை கூறினார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், குருபரப்பள்ளி, டெல்டா நிறுவன கூட்டரங்கில், டெல்டா நிறுவனத்தின் செயல்பாடுகள், உற்பத்தி குறித்த ஆய்வு கூட்டம் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. உடன், தொழில்துறை செயலாளர் அருண்ராய் , சிப்காட் மேலாண்மை இயக்குநர் மரு.செந்தில்ராஜ் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் ., சிப்காட் நிர்வாக இயக்குநர் சினேகா , கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர்கள் தே.மதியழகன் , ஒய். பிரகாஷ் , டி.ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### வழக்கறிஞர்கள் (திருத்த) சட்ட வரைவு 2025–ஐ

# முற்றிலுமாகத் திரும்பப் பெற வேண்டும்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, பிப்.25-**

**“வழக்கறிஞர்கள் (திருத்த) சட்ட வரைவை முற்றிலுமாக திரும்பப் பெற வேண்டும்” என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23-02-2025), வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**“சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் விளக்கு” - பேரறிஞர் அண்ணா!**

வழக்கறிஞர்கள் (திருத்த) சட்ட வரைவு 2025 என்பது சட்டத் துறையின் சுதந்திரம் மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல் ஆகும்.

முதலில், NJAC வழியாக நீதிபதி நியமனங்களை அபகரிக்க முயன்றது, பின்னர் நீதிபதி நியமனங்கள் மற்றும் பணியிட மாற்றங்களில் கொலீஜியத்தின் பரிந்துரைகளைப் புறந்தள்ளியது என 2014 முதல், ஒன்றிய பா.ஜ.க. அரசானது அமைப்புரீதியாக நீதித்துறையின் சுதந்திரத்தைச் சிதைத்து வருகிறது. தற்போது பார் கவுன்சில்களின் கட்டுப்பாட்டைத் தன் கையில் எடுத்துக் கொள்ள முயல்வது மூலம் சட்டத் தொழிலின் தன்னாட்சியைப் பறித்து, நீதித்துறையின் சுதந்திரத்தையே பலவீனப்படுத்தப் பார்க்கிறது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலின் பெயரை, மெட்ராஸ் பார் கவுன்சில் என மாற்ற நினைப்பதன் மூலம் பா.ஜ.க.வுக்கு தமிழ் மேல் உள்ள வெறுப்பு இந்தச் சட்டவரைவிலும் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. தமிழ்நாடு வெறும் பெயரல், அது எம் அடையாளம்!

தன்னியல்பாக வெடித்த போராட்டங்களாலும், கடும் எதிர்ப்புகளாலும் தற்போது இந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெறும் நிலைக்கு ஒன்றிய அரசு தள்ளப்பட்டுள்ளது. எனினும், இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, புதிய வடிவில் கொண்டு வரப்படும் என்பது கண்டனத்துக்குரியது ஆகும்.

இந்தச் சட்டவரைவை முற்றிலுமாகத் திரும்பப் பெற வேண்டும், சட்டத்தொழிலின் தன்னாட்சியை மதிக்க வேண்டும் என ஒன்றிய அரசைத் தி.மு.க. வலியுறுத்துகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை

# சேலம் கிழக்கு மாவட்டத்தில் நல உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், பிப். 25-

சேலம் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட;r செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் தமிழ்செல்வன், சந்திரமோகன், முத்துலிங்கம், சோமசுந்தரம், மனோகரன், சங்கர், ராஜா, கோபால், குணசேகரன், ரேகா பிரியதர்ஷினி, ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், உமாசங்கர், மாணிக்கம், விஜயகுமார், ரத்தினவேல் ,ராஜேந்திரன், சக்கரவர்த்தி ,மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து ,டாக்டர் செழியன், மணி, பாலமுருகன், சித்தார்த்தன் ,அழகுவேல் , நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், வேல் முருகன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன் அப்பாதுரை, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சி. சிவராமன், மற்றும் பேரூர் செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தீர்மானம் 1

மார்ச் 1 அன்று 72வது பிறந்தநாள் காணும், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர், இந்தியாவே போற்றும், இந்திய அளவில் முதன்மை முதலமைச்சராக திகழும் எங்கள் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டத்தை நிறைவேற்றி வருகிறார். கலைஞர் மகளிர் உரிமை தொகை மூலம் தமிழக பெண்களுக்கு மாதம் ரூ.1000/ அளித்தவர் பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து வசதி ஏற்படுத்தி தந்தவர்! புதுமை பெண் திட்டம் மூலம் கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/ வழங்கியவர்! காலை உணவு திட்டம் மூலம் பள்ளி குழந்தைகளின் பசியாற்றியவர்! நான் முதல்வன் திட்டம் மூலம் தமிழ்நாட்டின் இளைஞர்களின் திறன் மற்றும் பயிற்சி மேற்கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்தியவர்!

இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 என்ற உன்னதமான திட்டம் மூலம் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 48 மணி நேர சிகிச்சையினை அரசு ஏற்கும் என அறிவித்தவர் ! இது போன்ற எத்தனையோ எண்ணற்ற திட்டங்களை நாள்தோறும் நிறைவேற்றி தமிழக மக்களுக்கு தேர்தல் அறிக்கையில் சொன்னதை 90 சதவிகிதம் முடித்ததுடன் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறார் நம் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர்.

இந்திய அளவில் உறுதியான கூட்டணி அமைத்து தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் கழக தலைவர் அவர்கள், ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதிப்பகிர்வு, கூட்டாட்சித் தத்துவத்துக்கு விரோதமாகச் செயல்படும் ஆளுநர், அவதூறு பரப்பும் மக்கள் விரோத சக்திகள். உள்ளிட்ட பல்வேறு இடையூறுகளைத் தாண்டி, மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி, நல்லாட்சி நடத்தி வருகிறார். அவர் இதே உற்சாகத்துடன் மக்கள் பணியை மென்மேலும் தொடர, சேலம் கிழக்கு மாவட்ட கழகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு வரும் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகள் வெற்றி பெற்று,

வெல்வோம் 200! படைப்போம் வரலாறு!! என்ற கழகத் தலைவரின் சொல்லை மனதில் ஏந்தி ஒவ்வொரு நாளும் உழைப்போம்! உழைப்போம்!! உழைப்போம்!!! என்றும் எளியோர் எழுச்சி நாளான கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள தலைவாசல் (மத்திய, வடக்கு, தெற்கு), கெங்கவல்லி, ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம் (மத்திய, வடக்கு, தெற்கு), வாழப்பாடி (வடக்கு, தெற்கு), அயோத்தியாப்பட்டணம் (வடக்கு, தெற்கு), ஏற்காடு, பனமரத்துப்பட்டி, சேலம், வீரபாண்டி ஆகிய ஒன்றிய கழகங்கள் சார்பாகவும், ஆத்தூர், நரசிங்கபுரம், ஆகிய நகர கழகங்கள் சார்பாகவும், ஆட்டையாம்பட்டி, இளம்பிள்ளை, மல்லூர். பனமரத்துப்பட்டி, அயோத்தி யாப்பட்டணம், பேளூர், வாழப்பாடி, பெத்தநாயக்கன்ப்பாளையம், ஏத்தாப்பூர், கீரிப்பட்டி, தம்மம்பட்டி, கெங்கவல்லி, தெடாவூர், செந்தராப்பட்டி, வீரகனூர் ஆகிய பேரூர் கழகங்கள் சார்பாகவும், ஊராட்சிகள் சார்பாகவும் தோரணங்கள் அமைத்து இருவண்ணக் கொடியேற்றி, ஏழை,எளியோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவது, கல்வி உதவித் தொகை, மருத்துவ உதவி என மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடுமாறு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்ட முடிவில் முன்னாள் எம்.எல்.ஏ. சின்னதுரை நன்றியுரையாற்றினார்.



சேலம் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

### புதுக்கோட்டை மாவட்டம்

# பொன்னமராவதி பேருந்து நிலையம் மேம்பாட்டுப் பணி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, பிப்.25-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேரூராட்சியில், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து, ரூ.2.94 கோடி மதிப்பீட்டில், பொன்னமராவதி பேருந்து நிலையம் மேம்பாட்டுப் பணியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி 19.02.2025 அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களுக்கு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், பொதுமக்களுக்குத் தேவையான சாலை வசதி, பேருந்து வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி உள்ளிட்டவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், பொன்னமராவதியில், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட 2024-2025 ஆம் நிதியிலிருந்து ரூ.294 இலட்சம் மதிப்பீட்டில் பொன்னமராவதி பேருந்து நிலையம் மேம்பாட்டுப் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அதன்படி, பொன்னமராவதி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள 50க்கும் மேற்பட்ட கிராமப்புற மக்கள் இப்பேருந்து நிலை யத்திலிருந்து வெளியூர்களுக்கு சென்று வருகின்றனர். இந்த பொன்னமராவதி பேருந்து நிலைய வளாகம் சிதிலமடைந்து காணப்பட்ட சூழலில், தற்போது பொன்னமராவதி பேருந்து நிலைய மேம்பாட்டு பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, இப்பணியினை தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) ஜீவா சுப்பிரமணியன், பொன்னமராவதி வட்டாட்சியர் எம். சாந்தா, பேரூராட்சி செயல் அலுவலர் அண்ணாத்துரை, உதவி செயற்பொறியாளர் தமயந்தி, துணைத்தலைவர் வெங்கடேசன், அரசு ஒப்பந்ததாரர் நாகராஜன் (எ) மலைராஜா, பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



கரூர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கத்தில் அவை தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் முனவர்ஜான், எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், பி ஆர் இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், மாவட்ட, செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முன்னிலை வகித்தனர்.